தினமணி

# விவசாயிகளுக்கு நவீன சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

First Published : 21 Jan 2011 02:48:57 AM IST
Last Updated : 21 Jan 2011 02:50:21 AM IST



பயிற்சியில் பங்கேற்ற பின், வழங்கப்பட்ட இடுபொருள்களுடன் விவசாயிகள்.

கும்மிடிப்பூண்டி, ஜன.20: கும்மிடிப்பூண்டியை அடுத்த பாதிரிவேட்டில் விவசாயிகளுக்கு ராஜராஜன்-1000 ரக நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது குறித்து நவீன தொழில்நுட்பப் பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.

கும்மிடிப்பூண்டி அடுத்த பாதிரிவேட்டில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு ராஜராஜன்-1000 ரக நெல்லை ஒற்றை நடவு முறையில் சாகுபடி செய்து அதிக மகசூலை பெறுவது குறித்து பயிற்சி கும்மிடிப்பூண்டி வட்டார வேளாண்மை துறையால் அளிக்கப்பட்டது.

இப் பயிற்சிக்கு கும்மிடிப்பூண்டி துணை வேளாண்மை அலுவலர் பி.சேகர் தலைமை தாங்கினார். உதவி வேளாண்மை அலுவலர் சிவகுமார் முன்னிலை வகித்தார். பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் பி.சேகர் ராஜராஜன்-1000 ரக நெல்லை நவீன தொழில்நுட்பத்துடன் பயிரிடும் போது அதிக மகசூலை பெறுவது குறித்து விளக்கினார்.

எல்லா பருவங்களிலும் பயிரிடக்கூடிய இந்த நெல் வகையை பயிரிட ஒரு ஏக்கருக்கு 3 கிலோ நெல் விதையே போதுமானது என்றும், அதை நவீன முறையில் சாகுபடி செய்வது குறித்தும் விளக்கினர். மேற்கண்ட முறையில் பயிரிடும்போது ஒரு ஏக்கருக்கு 40 மூட்டை வரை மகசூல் கிடைக்கும் என்றும், இதனால் விவசாயிகள் 7500-10000 ரூபாய் வரை லாபம் ஈட்ட முடியும் என்றார்.

மேலும இப் பயிற்சியின் போது மேறகண்ட முறையில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளை தமிழக அரசு ஊக்கப்படுத்தும் விதமாக 1 ஹெக்டேர் மற்றும் 1 ஏக்கர் அளவு பயிரிடும் விவசாயிகளுக்கு ரூபாய் 3000 மதிப்புள்ள இடுபொருள்கள் வழங்குவதாக தெரிவித்தார்.

விழாவில் கலந்துகொண்ட மாதர்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் சகுந்தலா, இடு பொருள்களை 82 பயனாளிகளுக்கு வழங்கினார். தேசிய வேளாண் நிறுவனத்தை சேர்ந்த கஜேந்திரன்,ரமேஷ்கண்ணன் மற்றும் பாதிரிவேடு, மாதர்பாக்கம், பூதூர், நேமள்ஞர் பகுதி விவசாய மன்றங்களைச் சேர்ந்தோர் கலந்துகொண்டனர்.

**உணவுப் பணவீக்கம் குறைந்தாலும் விலை குறையவில்லை:பிரணாப் முகர்ஜி**

First Published : 21 Jan 2011 12:00:00 AM IST



புது தில்லி, ஜன.20: உணவுப் பணவீக்கம் வியாழக்கிழமை சற்றே குறைந்தது. ஆனாலும் வெளிச்சந்தையில் உணவுப் பொருள்களின் விலை குறைந்தபாடில்லை என்பதை மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி ஒப்புக்கொண்டார்.

வருட ஆரம்பத்தில் இருந்த 18.32 புள்ளிகள் என்ற நிலையிலிருந்த உணவுப் பணவீக்கம், ஜனவரி 8-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 15.52 புள்ளிகளாகக் குறைந்தது.

இதற்கு முக்கிய காரணம், பருப்பு, கோதுமை, உருளைக்கிழங்கு போன்ற பொருள்களுக்கு ஆண்டு விகித விலையில் ஏற்பட்ட விலைக்குறைவு என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்தப் புள்ளிவிவரம் யாருக்கும் எந்த ஆறுதலும் தராது என்று பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

""இரு வாரங்களுக்கு முன்பிருந்த நிலவரங்களின் அடிப்படையில் இந்தப் புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது.

இப்போதும் சில காய்கறிகளின் விலை உச்ச நிலையிலேயே உள்ளது.

சமீபத்தில் உயர்த்தப்பட்ட பெட்ரோல் விலையினால் உணவுப் பணவீக்கம் எங்கே போகும் என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்,'' என்றார் அவர்.

**பலா மரம்: கேரள விவசாயக் குழுவினர் பார்வை**

First Published : 21 Jan 2011 09:07:12 AM IST

பண்ருட்டி, ஜன. 20: கேரள மாநிலம் கோட்டயத்தைச் சேர்ந்த விவசாயக் குழுவினர் பண்ருட்டி பகுதியில் உள்ள பலாத் தோப்புகளை பார்வையிட்டு விவசாயிகளுடன் வியாழக்கிழமை ஆலோசனை நடத்தினர்.

÷கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் பரனஞானம் கிராமத்தைச் சேர்ந்த கிராமஸ்ரீ விவசாயக் கழக உறுப்பினர்கள் 25 பேர் குழுத் தலைவர் கே.கே.தாமஸ் தலைமையில் பெரியகுளம், திண்டுக்கல், திருச்சி பகுதியில் உள்ள விவசாய பல்கலைக்கழகங்கள் மற்றும் பண்ணைகளை பார்வையிட்டு வியாழக்கிழமை பண்ருட்டிக்கு வந்தனர்.

÷இவர்களை வரவேற்ற கடலூர் விதைச் சான்று உதவி இயக்குநர் பி.ஹரிதாஸ் மாளிகம்பட்டு கிராமத்தில் உள்ள கருணாகரன் பலாத்தோப்புக்கு அழைத்து சென்று பார்வையிட வைத்தார்.

÷பலாப்பழத்தை சாப்பிட்ட கேரள விவசாயக் குழுவினர் நல்ல சுவையுடன் உள்ளதாக கூறினர்.

÷பின்னர் பலா விவசாயிகளிடம் கலந்து உரையாடியவர்கள் பராமரிப்பு தொழில்நுட்பம், சந்தை வாய்ப்பு குறித்து கேட்டறிந்தனர்.

÷பண்ருட்டி பகுதியில் பலா அதிக அளவில் பயிர் செய்கின்றனர். இதன் சுளை, தேன் போன்று சுவையாக உள்ளது. இதனால் நல்ல சந்தை வாய்ப்பு கிடைக்கிறது.

÷மேலும் பழத்துக்காகவே பலா சாகுபடி செய்கின்றனர்.

÷கேரளத்தில் ரப்பர் மரம் காற்றில் சாயாமல் இருக்க வரப்பு ஓரம் பலா மரம் நடப்படும். மழை அதிகம் பெய்வதால் எங்கள் பகுகுயில் விளையும் பழத்தில் சுவை இருக்காது.

÷இதனால் பலா பிஞ்சு, காய், பழம், விதை முதலியவற்றில் இருந்து உலர் பலா, சிப்ஸ், அல்வா, சாக்லெட், கொட்டையில் இருந்து மாவு உள்ளிட்ட மாற்று பொருள்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறோம்.

÷இவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

÷தற்போது வந்த நோக்கம் பலாவின் தரத்தை உயர்த்தி சுவையை மேம்படுத்துவது, சந்தை வாய்ப்பை கண்டறிவது, சாகுபடித் தொழில் நுணுக்கங்களை கேட்டறிந்து எங்கள் பகுதியில் செயல்படுத்த உள்ளோம் என கூறினர்.

÷பின்னர் பாலூர் விதை ஆராய்ச்சி மையத்துக்கு சென்றவர்கள் மேம்படுத்தப்பட்ட புதிய ரக பலா கன்றுகளை வாங்கி சென்றனர்.

**நெல் விலையை உயர்த்தக் கோரி 27-ல் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்: விவசாயிகள் சங்கம்**

First Published : 21 Jan 2011 09:01:13 AM IST

விழுப்புரம், ஜன. 20: நெல், கரும்பு விலையை உயர்த்தி வழங்க வலியுறுத்தி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் கே. பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

÷விழுப்புரத்தில் அவர் நிருபர்களிடம் கூறியது:

÷அரசு 2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டத்தில் முறைகேடு என்றோம். அதை அரசு மறுத்தது. ஆனால் தற்போது தேனி, ஈரோடு, விருதுநகர், திண்டுக்கல் மாவட்டங்களில் பல முக்கிய பிரமுகர்கள், ஆளும்கட்சி பிரமுகர்களுக்கு சில இடங்களில் அந்நிலங்களில் தொழிற்சாலைகள், கல்விக்கூடங்கள் உள்ளன.

÷எனவே பயனாளிகளின் பட்டியலை அந்தந்த ஊராட்சிகளில் வெளிப்படையாக ஒட்ட வேண்டும். வேறு எந்த திட்டமாக இருந்தாலும் கிராமசபை கூட்டத்தில் தான் முடிவெடுக்க வேண்டும் என்று அரசு கூறியது. ஆனால் 2 ஏக்கர் திட்டம் மட்டும் கிராம சபையில் முடிவெடுக்கப்படுவதில்லை.

÷கடந்த ஒரு மாதத்தில் மட்டும் உரத்தின் விலை ரூ.60 உயர்ந்துள்ளது. மத்திய அரசுதான் விலை நிர்ணயம் செய்யும் என்றனர். ஆனால் அந்தந்த கம்பெனிகளே விலை நிர்ணயம் செய்யலாம் என்று தற்போது முடிவெடுத்துள்ளது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்.

÷விவசாயிகளுக்கு நெல் குவிண்டாலுக்கு ரூ.1500, கரும்பு டன்னுக்கு ரூ.3000, பால் கொள்முதல் விலையை மேலும் உயர்த்தக் கோரியும் தமிழகம் முழுவதும் வட்டாட்சியர் அலுவலகங்கள் முன்பு 27-ம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றார்.

÷முன்னதாக மார்க்சிஸ்ட் கட்சி அலுவலகத்தில் ஒன்றிய நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. இதில் கரும்பு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஆர். ராமமூர்த்தி, மார்க்சிஸ்ட் கட்சி மாவட்ட செயலர் ஜி. ஆனந்தன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஆர். தாண்டவராயன், மாவட்டச் செயலர் என். சுப்பராயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நெல் அறுவடைக்குப் பின் செய்ய வேண்டிய நேர்த்தி தொழில்நுட்பங்கள்**

First Published : 20 Jan 2011 12:52:15 PM IST

விருத்தாசலம்: நெல் அறுவடைக்குப் பின் செய்ய வேண்டிய நேர்த்தி தொழில்நுட்ப முறைகள் குறித்து வேளாண்மை துணை இயக்குநர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து வேளாண்மை துணை இயக்குநர் நா.தனவேல் தெரிவித்தது: கடலூர் மாவட்டத்தில் தற்பொழுது நெல் அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ளதால், விவசாயிகள் கீழ்கண்ட, அறுவடைக்குப் பின் செய்ய வேண்டிய நேர்த்தி தொழில்நுட்பங்களை கடைபிடித்து கூடுதல் வருவாய் பெறுமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது.

நெல் ரகங்களின் வயதுக்கேற்றவாறு பயரின் அறுவடையை உரிய காலத்தில் மேற்கொள்ள வேண்டும். நெல் கதிரின் மணிகள் 80 சதவீதம் மஞ்சள் நிறமாக மாறி இருந்தாலே அறுவடையை மேற்கொள்ளலாம். இதனால் மணிகள் உதிர்வதைத் தவிர்க்கலாம்.

அறுவடையின்போது 19 முதல் 23 சதவீதம் ஈரப்பதம் இருக்க வேண்டும். முதிர்ந்த நெல் மணிகளின் அரிசி கடுமையானதாகவும், உறுதியாகவும் இருக்கும். அறுவடை செய்த நெல்லை நன்றாக தூய்மைபடுத்த வேண்டும்.

அதிக சூரிய வெப்பத்தில் நெல்லை காய வைக்கக்கூடாது. காயவைத்த நெல்லின் ஈரப்பதம் 12 சதவீதத்துக்குள் இருக்க வேண்டும். அதிக ஈரப்பதமுள்ள நெல் மணிகளைச் சேமித்து வைத்தால் பூஞ்சாண வித்துக்கள் பரவி நெல்லின் தரம் பாதிக்கப்படும். நெல்லை சுத்தமான கோணிப்பைகளில் நிரப்பி தரையின் மீது மரச்சட்டங்கள் அல்லது காய்ந்த வைக்கோல் பரப்பி அதன் மேல் மூட்டைகளை அடுக்கி வைக்க வேண்டும்.

நெல் மூட்டைகளை சுவரிலிருந்து ஒரு அடி இடைவெளிவிட்டு அடுக்கு வைத்தால் சுவற்றின் ஈரப்பதம் நெல் மணிகளைத் தாக்காது. சேமித்து வைத்துள்ள நெல்லில் அந்துப்பூச்சி தாக்காமலிருக்க மாலத்தியான் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 10 மில்லி மருந்து என்ற அளவில் கலந்து தரைப்பகுதி மற்றும் மூட்டைகளின் மீது தெளிக்க வேண்டும்.

பூச்சிகள், பூஞ்சாணங்கள் தாக்கப்பட்ட நெல் மற்றும் ஈரப்பதத்தால் கெட்டுப் போன நெல்லை தனியாக பிரித்து விட வேண்டும். விளைபொருள்களுக்கு விவசாயிகள் எதிர்பார்க்கும் விலை கிடைக்காதபோது அவற்றினை இருப்பு வைக்க ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கிட்டங்கி வசதி உள்ளது. இருப்பு வைக்கும் பட்சத்தில் உடனடி பணத்தேவைக்கு பொருளீட்டு கடன் பெற வசதி உள்ளது. நல்ல விலை கிடைக்கும்போது விற்பனை செய்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

**வாழையில் திசு வளர்ப்பு முறைகள்**

ஜி. சுந்தரராஜன்

First Published : 20 Jan 2011 12:50:19 PM IST

சிதம்பரம்: உயிரியல் தொழில்நுட்பங்கள் தமிழக விவசாயிகளிடம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. பாரம்பரிய இனப்பெருக்கு முயற்சிகளுக்கு மாற்றாக ஒரு திசுவை (பண்ள்ள்ன்ங்) கொண்டு பல நூறு செடிகள், மரங்களை குறுகிய காலத்தில் உருவாக்கி அதன்மூலம் அதிகளவு மகசூல் மற்றும் லாபம் பெறலாம். இத்தகைய திசு வளர்ப்பு முறைகள் குறித்து தமிழக விவசாயிகள் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

÷வாழையில் வெற்றிகரமான திசு வளர்ப்பு முறைகள் குறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத் துறை உதவிப் பேராசிரியர் தி. ராஜ்பிரவீன் தெரிவித்தது:

÷தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் வாழை பிற மாநிலங்கள், வெளிநாடுகளுக்கு அதிகபட்சமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தையில் வாழைக்கு அதிக கிராக்கி உள்ளதால் வாழையை பல லட்சம் விவசாயிகள் விரும்பி சாகுபடி செய்கின்றனர்.

÷வாழை சாகுபடியில் பல நடைமுறை சிக்கல்கள் வணிகத்தை வெகுவாக பாதிக்கச் செய்துள்ளது. குறிப்பாக பாரம்பரிய வாழை சாகுபடி முறையில் குறைந்தளவு இனப்பெருக்கமே செய்ய முடியும்.

÷நல்ல வாழைக் கரணைகள் இருந்தால்கூட தங்களின் பாரம்பரிய சாகுபடி பரப்பளவை அதிகரிக்கச் செய்ய முடியவில்லை. இச்சூழலில் வாழையில் பூச்சி, நோய் தாக்குதல் கடுமையான உற்பத்தி ஏற்படுத்தி வருகிறது. எனவே பாரம்பரிய வாழை உற்பத்தி முறைகளுக்கு மாற்றாக திசு வளர்ப்பு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இம்முறையில் மிக எளிதாக பல ஆயிரம் முதல் சில லட்சம் வரையிலான தரமான வாழைக் கன்றுகளை சாகுபடிக்கு தயார் செய்ய முடியும். தொடர் வேளாண் மற்றும் தோட்டக்கலை ஆராய்ச்சிகள் காரணமாக பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களை எதிர்கொண்டு நன்றாக வளரும் வாழை ரகங்களை திசு வளர்ப்பில் வேளாண் விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

÷மேலும் திசு வளர்ப்பு முறையில் சாகுபடி செய்யப்படும் வாழைகளின் நடவு நாளை கொண்டு அறுவடை நாளை கூட நாம் எளிதாக தெரிந்து கொள்ள முடியும்.

வாழை விவசாயிகள் அறுவடை நாளை முன்கூட்டியே தெரிந்து கொண்ட காரணத்தால் எளிதாக விற்பனை மற்றும் வணிக முயற்சிகளில் ஈடுபட்டு அதிகளவு லாபம் பெற முடியும். இவ்வாறு பாரம்பரிய வாழை சாகுபடி முறைகளுக்கு மாற்றாக உள்ள திசு வளர்ப்பு முறைகளில் உள்ள பல நடைமுறை சிக்கல்களுக்கு தீர்வு மற்றும் வர்த்தக பயன்பாடு உள்ளது.

÷இதன் காரணமாக நமது நாட்டில் தேசிய அளவில் 45 சதவீதம் வரை வாழை சாகுபடி திசு வளர்ப்பு முறைகள் வாயிலாக சாகுபடி செய்யப்படுகிறது.

ஆந்திரம், கேரளம், கர்நாடகம் திசு வளர்ப்பு முறைகள் வாயிலாக வாழை சாகுபடி செய்து அதிகளவு சாகுபடி பரப்பளவை கொண்டுள்ளது. திசு வளர்ப்பு வாழைகளில் மேற்கொள்ளப்படும் நவீன நீர்ப்பாசன முறைகளான சொட்டுநீர்ப் பாசனம், புதிய உரமிடுதல் முறைகள் அதிகளவு உற்பத்தி பெருக்கத்துக்கு பெரிதும் உதவுகிறது.

பிற பயன்கள்: வாழையோடு மட்டுமல்லாமல் திராட்சை, சப்போட்டா, எலுமிச்சை போன்ற பழ வகைகளும், ஏலக்காய், இஞ்சி, மிளகு, மஞ்சள், குங்குமப்பூ உள்ளிட்ட வாசனைப் பயிர்களும், உருளைக்கிழங்கு, கரணைகிழங்கு ஆகிய காய்கறிகளும், தேயிலை, தேக்கு, மூங்கில் ஆகியவற்றையும் திசு வளர்ப்பு முறையில் பயிரிடலாம்.

எனவே தமிழக விவசாயிகள் திசு வளர்ப்பு முறைகளை பயன்படுத்தி அதிகளவு சாகுபடி மற்றும் லாபத்தை பெறலாம் என்கிறார் தி. ராஜ்பிரவீன்.

**தை-மாசி பட்டத்துக்கேற்ற எள் பயிர்**

எஸ்.சபேஷ்

First Published : 20 Jan 2011 12:49:59 PM IST

அரக்கோணம்: "விவசாயிகள் எள் சாகுபடி தொழில்நுட்பங்களை சரிவர கடைபிடிப்பதில்லை. இதனால் எள் பயிரின் சராசரி மகசூல் குறைவாகவே உள்ளது. நவீன தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதால் எள் பயிரில் சராசரியாக 2 ஆயிரம் கிலோ வரை மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது' என்கிறார் நெமிலி வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) ஒய்.எம்.முபாரக்.

எள் பயிரிடும் விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த தொழில்நுட்பங்கள்:

பருவம் மற்றும் ரகங்கள்: மானாவாரி வைகாசி மற்றும் ஆடிப் பட்டங்களில் டி.எம்.வி. 3, வி.ஆர்.ஐ. 1 மற்றும் கோ 1, கார்த்திகை பட்டங்களில் டி.எம்.வி. 3, வி.ஆர்.ஐ. 1, கோ 1 மற்றும் எஸ்.வி.பி.ஆர். 1, மேலும் இறவை தை-மாசி பட்டங்களில் டி.எம்.வி 3.6, கோ.1, வி.ஆர்.ஐ 1, பையூர் 1, பங்குனி சித்திரை பட்டங்களில் டி.எம்.வி. 3.4, கோ.1, வி.ஆர்.ஐ. 1, எஸ்.வி.பி.ஆர். 1.

நிலம் தயாரித்தல்: நிலத்தை டிராக்டரில் ஆவ உழும் கலப்பையால் 2 அல்லது 3 முறை புழுதிபட உழ வேண்டும். ஏர் கலப்பையைக் கொண்டு நிலத்தை 5 அல்லது 6 முறை உழுது தயார் செய்ய வேண்டும். நிலத்தின் மேல்மட்டத்தில் நீர் புகாத கடின மண்பகுதி ஏற்பட்டிருந்தால் 3 வருடங்களுக்கு ஒரு முறை உளி கலப்பையால் 2 அடி ஆழம் உழுது நிலம் தயார் செய்ய வேண்டும். மண்வெட்டி கொண்டு மண்ணை கட்டிமுட்டி இல்லாமல் உடைத்து நிலத்தை தயார் செய்ய வேண்டும்.

ஏக்கருக்கு கடைசி உழவில் 10 வண்டி(5டன்) தொழுஉரம் இட வேண்டும். நிலத்தின் சரிவை பொருத்து 30 அடி முதல் 60 அடி நீளம் வரை அளவுகள் உள்ள சிறிய பாத்திகளை அமைத்து நிலம் தயார் செய்ய வேண்டும். நிலத்தில் நீர் தேங்காவண்ணம் சமமாக தயார் செய்ய வேண்டும்.

விதையளவு: அனைத்து ரகங்களுக்கும் ஏக்கருக்கு 2 கிலோ விதை போதுமானதாகவும் விதையை மணலுடன் கலந்து சீறாக தூவ வேண்டும்.

விதைப்பு: எள் விதையை மணலுடன் கலந்து நிலத்தில் சீராக தூவ வேண்டும். ஒரு தேவையான 2 கிலோ விதையுடன் 8 கிலோ மணல் கலந்து விதையை தூவ வேண்டும். சில பகுதிகளில் எள்ளில் வரிசை நடவு மேற்கொள்ளப்படுகிறது. 3 செ.மீ ஆழம் கோடு கிழித்து அதில் மணலுடன் எள் விதையை கலந்து சீராக விதைக்க வேண்டும்.

இடைவெளி: செடிக்கு செடி 1அடி இடைவெளி விட வேண்டும். வரிசைக்கு வரிசை 1 அடி இடைவெளியில் சதுர மீட்டர் பரப்பளவில் 11 செடிகள் இருக்க வேண்டும்.

செடி கலைத்தல்: விதைத்த 15ஆவது நாளில் செடிக்கு செடி 15 செ.மீ. இடைவெளி இருக்கும் படியும் 30ஆவது நாளில் 30 செ.மீ. இடைவெளி உள்ளவாறு வைத்து மற்ற செடிகளை பிடுங்கி

விட வேண்டும். செடிகளை கலைத்து விடும்போது வயலில் ஈரம் இருப்பது நல்லது. எள் பயிரில் பயிர் கலைத்தல் ஒரு முக்கிய பணியாகும்.

உரஅளவு: மண் பரிசோதனை செய்து உரமிட வேண்டும். மானாவாரிக்கு ஏற்றவாறு இறவைக்கு ஏற்றவாறு வேளாண் அதிகாரிகளின் ஆலோசனை பெற்று உரமிடலாம்.

களை நிர்வாகம்: ஒரு ஏக்கருக்கு ஆலோகுளோர் 1500 மி.லி. மருந்தை 360 லிட்டர் தண்ணீர் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு விதைத்த மூன்று நாள்களுக்குள் மாலை வேளைகளில் பின்நோக்கி நடந்து மண் மீது தெளிக்க வேண்டும். இல்லாவிடில் விதைத்த 15ஆவது மற்றும் 30ஆவது நாட்களில் கைகளை எடுக்க வேண்டும். களை கொல்லி தெளித்தால் 30 நாளில் ஒரு கைகளை எடுத்தால் போதுமானது. களைக்கொல்லி தெளித்தவுடன் நீ0ர் பாய்ச்ச வேண்டும்.

நீர் நிர்வாகம்: விதைக்கும்போது மண்ணில் ஈரம் இருக்க வேண்டும். இதுதவிர விதைத்த 7 நாட்களுக்குள் தண்ணீர் (உயிர்தண்ணீர்) பாய்ச்ச வேண்டும். பூக்கும் முன் அதாவது விதைத்த 20-25ஆவது நாள் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பூக்கும் பருவமான 30-55ஆவது நாள் தணணீர் பாய்ச்ச வேண்டும். மேலும் காய் பிடிக்கும் பருவமான 55-65ஆவது நாள் பயிருக்கு தேவையான அளவு நீர் பாய்ச்ச வேண்டும்.

பயிர்பாதுகாப்பு: பயிர் பாதுகாப்பில் பூச்சி நிர்வாகம் மிக முக்கியமானது. பூச்சிகளில் எள்குடையான், கொண்டைப்புழு, எள்காய்ஈ மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகள் முக்கியமானவை ஆகும். இவற்றை கட்டுபடுத்த வேளாண் அலுவலர்களை அனுகினால் அவர்கள் அப்பகுதிக்கேற்ப குறிப்பிட்ட பூச்சிக்கேற்ப கட்டுபடுத்தும் முறைகளை தெரிவிப்பர்.

நோய்கள்: நோய்களில் வாடல்நோய், வேரழுகல் நோய், பூவிலை நோய், சாம்பல் நோய், இலைப்புள்ளி நோய் என பல்வேறு நோய்கள் உள்ளன.வாடல் நோய் தாக்கிய செடிகள் வாடி காய்ந்து துவண்டு விடும். வேரழுகல் நோய் தாக்கிய செடிகள் வேர் மற்றும் தண்டு பகுதியில் அழுகி பயிர் காய்ந்து விடும். இது பயிரின் எல்லா காலங்களிலும் தென்படும். பூவிலை நோய் தாக்கிய செடியின் பூவின் பாகங்கள் இலை கொத்து போல் காணப்படும். இது ஒரு வகை நச்சுயிரினால் ஏற்படுகிறது. சாம்பல் நோய் தாக்கிய செடிகளில் இலைகளின் மேற்புறத்தில் வெண்ணிற அல்லது சாமபல் நிற பூஞ்சாண வளர்ச்சியை காணலாம்.இந்நோய் தாக்கிய செடிகள் இலைகள் சிறுத்து சுருண்டு கீழே விழுந்து விடும். மேற்கண்ட நோய்கள் இருப்பது தெரியவந்தால் விவசாயிகள் அவர்களது பகுதிகளில் உள்ள உதவி வேளாண் அலுவலர்களை அனுகி அச்செடிக்கேற்ப நோய்களை கட்டுபடுத்தும் முறைகளை கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

எள் சாகுபடி குறித்து மேலும் விவரங்கள் தேவைப்படுவோர் அவர்களது வட்டாரங்களில் உள்ள வேளாண் அலுவலகங்களை அனுகலாம் என்றார் வேளாண் உதவி இயக்குநர்(பொறுப்பு) ஒய்.எம்.முபாரக்.

**விவசாயிகளுக்கு வேண்டுகோள்...**

First Published : 20 Jan 2011 11:46:07 AM IST

திருத்துறைப்பூண்டி, ஜன. 19: நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2000-ம், தமிழக அரசு குவிண்டாலுக்கு ரூ. 400 ஊக்கத் தொகையாகவும் வழங்க வேண்டும் என, கோரப்பட்டுள்ளதால், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லை விற்பனை செய்யும் விவசாயிகள் அந்த கொள்முதல் ரசீதை பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்று, "நமது நெல்லைக் காப்போம்' ஒருங்கிணைப்பாளர் ஆர். ஜெயராமன் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளது:

இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார், விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் வலிவலம் சேரன், காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்க செயலர் கீவளூர் தனபால் ஆகியோர் தலைமையில் டிசம்பர் 10-ம் தில்லியில் நாடாளுமன்றம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதையடுத்து, அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து ஆலோசனை நடத்தி விலை உயர்வை அறிவிப்பதாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

மேலும், மாநில அரசிடம் ஊக்கத் தொகையாக குவிண்டாலுக்கு ரூ. 400 கோரப்பட்டுள்ளது. இந்த தொகை விரைவில் மத்திய, மாநில அரசுகளால் அறிவிக்கப்பட உள்ளதால், அரசு கொள்முதல் நிலையங்களில் நெல்லை விற்பனை செய்யும் விவசாயிகள் அந்த ரசீதுகளை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டுமென்றும், விலை உயர்வு அறிவிக்கப்படும் பட்சத்தில் அந்த கூடுதல் தொகையை பெற இது உதவியாக இருக்கும் என்றும் ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

**நாளை வேளாண் குறைதீர் கூட்டம்**

First Published : 20 Jan 2011 09:51:34 AM IST

தருமபுரி, ஜன.19: தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஜனவரி 21) காலை 11 மணிக்கு நடைபெறுகிறது.

ஆட்சியர் இரா. ஆனந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்றுத் தங்களது குறைகளை தெரிவிக்கலாம்.

**முட்டை விலை குறைந்தது**

First Published : 20 Jan 2011 09:56:58 AM IST

நாமக்கல், ஜன.19: நாமக்கல்லில் முட்டையின் கொள்முதல் விலை 10 காசுகள் குறைக்கப்பட்டுள்ளது.

÷கடந்த வாரம் முட்டையின் விலை ரூ.3.02 காசாக நிர்ணயிக்கப்பட்டது. இப்போது நுகர்வு குறைந்துள்ளதால், முட்டையின் விலையை தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு 10 காசுகள் குறைத்துள்ளது.

÷பிறநகரங்களில் முட்டையின் கொள்முதல் விலை விவரம்: சென்னை-ரூ.3.05, பெங்களூர்-ரூ.3, மைசூர்-ரூ.2.86, ஹைதராபாத்-ரூ.2.29, மும்பை-ரூ.3.24, விஜயவாடா-ரூ.2.97, கொல்கத்தா-ரூ.3.05.

**வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கு பயிற்சி**

First Published : 20 Jan 2011 11:46:55 AM IST

நீடாமங்கலம், ஜன. 19: நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கான மக்கள் பங்கேற்பு விரிவாக்க உத்திகள் குறித்த பயிற்சி புதன்கிழமை நடைபெற்றது.

பயிற்சிக்கு திருவாரூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் செ. ரகுநாதன் தலைமை வகித்தார்.

பயிற்சியின் முக்கியத்துவம் குறித்து நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் தி. செங்குட்டுவன் பேசுகையில், விவசாயிகளின் தேவைகளை அறிய மக்கள் பங்கேற்பு உத்திகள் பயனுள்ளதாக அமைகின்றன என்றார்.

மக்கள் பங்கேற்பு விவரிவாக்க உத்திகளான பங்கேற்புப் பயிலரங்கம், மக்கள் பங்கேற்பு, ஊரகத் திறனாய்வு, மக்கள் பங்கேற்புத் திட்ட திறனாய்வு மற்றும் கண்காணிப்பு ஆகியவை குறித்து முனைவர் மு. ராமசுப்பிரமணியன் விளக்கினார்.

பயிற்சியல் திருவாரூர் மாவட்ட வேளாண் உதவி இயக்குனர்கள், வேளாண் விரிவாக்க அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**ராஜராஜன் 1000: செயல் விளக்க திடல் அதிகாரிகள் நேரில் ஆய்வு**

First Published : 20 Jan 2011 12:32:17 PM IST

ஆறுமுகனேரி,ஜன.19: உடன்குடி வட்டாரம் கல்விளை கிராமத்தில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி செயல் விளக்கத் திடலினை அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்தனர்.

உடன்குடி வட்டாரம் கல்விளை கிராமத்தில் ஆத்மா திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ராஜராஜன் 1000 செயல் விளக்கத் திடல்களை மாவட்ட வேளாண் துணை இயக்குநர் ரஞ்சித் சிங் தனராஜ் நேரில் பார்வையிட்டார்.

விவசாயிகளிடம் உரையாடிய அவர் நெல்பயிரில் அதிக சிம்புகள் காணப்படுவதால் விவசாயிகளுக்கு அதிக மகசூல் கிடைக்கும். அடுத்த பருவத்தில் இத்திட்டத்தின் கீழ் திடல்கள் அமைக்க நிதி உதவி செய்யப்படும் என்றார் அவர். நிகழ்ச்சியில் வேளாண்துறை மூலம் பயன்பெறும் விவசாயிகளுக்கு அடையாள அட்டைகளை ரஞ்சித் சிங் தனராஜ் மற்றும் உடன்குடி வேளாண் உதவி இயக்குநர் த.பாரதி ஆகியோர் வழங்கினர்.

ஆய்வின் போது உடன்குடி வேளாண்மை அலுவலர் ஏ.பி.சுஜாதா, துணை வேளாண் அலுவலர் சிவமூர்த்தி மற்றும் உதவி வேளாண் அலுவலர் மெல்கி சேதக் ஆகியோர் உடன் வந்தனர்.

**தாராபுரத்தில் சிறிய வெங்காயம் கிலோ ரூ.70**

First Published : 20 Jan 2011 10:13:59 AM IST

தாராபுரம், ஜன. 19: தாராபுரம் நகராட்சி வாரச் சந்தையில் புதன்கிழமை சிறிய வெங்காயம் கிலோ ரூ.70க்கு விற்பனையானது.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டாரத்தில் குண்டடம் மேட்டுக்கடை, நஞ்சியம் பாளையம், உப்பாறு அணை உட்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கர்களில் சிறிய வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த நவம்பர் மாதம் கிலோ ரூ.12க்கு விற்பனையானது. அதன்பிறகு படிப்படியாக ரூ.40க்கு உயர்ந்தது.

இந்நிலையில், கடந்த மாதம் பெய்த கனமழையால் சாகுபடி செய்யப்பட்டிருந்த வெங்காயம் முற்றிலும் அழுகி நாசமானது. இதனால் சிறிய வெங்காயத்துக்கு மேலும் கிராக்கி ஏற்பட்டது. இந்நிலையில், சிறிய வெங்காயம் வரத்து வெகுவாகக் குறைந்து விட்டது. தினசரி 10 டன் சிறிய வெங்காயம் வரத்து வந்த நிலையில வெறும் 1 டன்னாக குறைந்து விட்டது. இதன் காரணமாகவும் பழனி தைப்பூசத்துக்கு செல்லும் பக்தர்கள் அதிக கொள்முதல் செய்வதாலும் வெங்காயத்துக்கு கடும் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தாராபுரம் வாரச் சந்தையில் கிலோ ரூ.70க்கு விற்கப்பட்டது.

## அறுவடைக்கு பின் நேர்த்தி தொழில் நுட்பங்கள்

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,01:09 IST

விருத்தாசலம் : நெல் அறுவடைக்குப் பின் நேர்த்தி தொழில் நுட்பங்களை செய்து அதிக லாபம் பெறலாம் என வேளாண்மை துணை இயக்குனர் தனவேல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கடலூர் மாவட்டத்தில் தற்போது நெல் அறுவடைக்குத் தயாராக உள்ளதால் விவசாயிகள் அறுவடைக்குப் பின் செய்ய வேண்டிய நேர்த்தி தொழில் நுட்பங்களை கடைபிடித்து கூடுதல் வருவாய் பெறலாம். நெல் ரகங்களின் வயதிற்கேற்றவாறு பயிரின் அறுவடையை உரிய காலத்தில் மேற்கொள்ள வேண்டும். நெல் கதிர் மணிகள் 80 சதம் மஞ்சள் நிறமாக மாறி இருந்தாலே அறுவடையை மேற்கொள்ளலாம். இதனால் மணிகள் உதிர்வதை தவிர்க்கலாம். அறுவடையின் போது 19 முதல் 23 சதவீதம் ஈரப்பதம் இருக்க வேண்டும். அறுவடை செய்த நெல்லை நன்றாக சுத்தம் செய்ய வேண்டும். அதிக சூரிய வெப்பத்தில் காயவைக்கக் கூடாது. காயவைத்த நெல்லின் ஈரப்பதம் 12 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும். சுத்தமான நெல்லை கோணிப்பைகளில் நிரப்பி தரையின் மேல் மரச்சட்டங்கள் அல்லது காய்ந்த வைக்கோல் பரப்பி அதன் மேல் மூட்டைகளை அடுக்கி வைக்க வேண்டும். பூச்சிகள், பூஞ்சாணங்கள், தாக்கப்பட்ட நெல் மற்றும் ஈரப்பதத்தால் கெட்டுப்போன நெல்லை தனியாக பிரித்து விட வேண்டும். விளைபொருட்களுக்கு விவசாயிகள் எதிர்பார்க்கும் விலை கிடைக்காத போது அவற்றினை இருப்பு வைக்க ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கிடங்கி வசதி உள்ளது. இருப்பு வைக்கும் பட்சத்தில் உடனடி பணத் தேவைக்குப் பொருளீட்டு கடன் பெற வசதி உள்ளது. நல்ல விலை கிடைக்கும்போது விற்பனை செய்து பயனடையலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## நெல், கரும்பு விலையை உயர்த்த வலியுறுத்தி 27ம் தேதி ஆர்ப்பாட்டம்: பாலகிருஷ்ணன் பேட்டி

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,01:19 IST

விழுப்புரம் : நெல், கரும்பு கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி வரும் 27ம் தேதி விவசாயிகள் சங்கம் சார்பில் தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடக்கிறது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பாலகிருஷ்ணன் விழுப்புரத்தில் நிருபர்களிடம் கூறியதாவது: தமிழக அரசு

சார்பில் நிலமற்ற விவசாயிகளுக்கு 2 லட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்கியதாக தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றவர்களின் விவரங்களை அந்தந்த ஊராட்சி அலுவலகங்களின் விளம்பர பலகையில் ஒட்ட வேண்டும். இது குறித்து அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். சில இடங்களில் ஏழைகளை பினாமிகளாக கொண்டு அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களை வசதி படைத்தவர்கள் சிலர் ஆக்கிரமித்துள்ளனர்.

உரத்தின் விலை தற்போது மூட்டைக்கு 30 ரூபாய் முதல் 60 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. மத்திய அரசு உரத்தின் விலையை நிர்ணயித்து வந்த போது விலை உயர்வு இல்லை. தற்போது உர நிறுவனங்கள் விலையை நிர்ணயிப்பதால் விவசாயிகள் பாதித்துள்ளனர். மேலும் விவசாயிகள் பயன் பெறும் வகையில் அரசு நெல் விலை குவிண்டால் 1,500 ரூபாயும், கரும்பிற்கு டன் ஒன்றுக்கு 3,000 ரூபாயும் வழங்க வேண்டும். இந்த கோரிக்கையை வலியுறுத்தி வரும் 27ம் தேதி மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து தாலுகா அலுவலகம் முன்பும் விவசாயிகள் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் 3,739 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதுவரை விழுப்புரம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்கவில்லை. மத்திய அரசு நிதி வழங்கவில்லை என்று மாநில அரசு காரணம் கூறி விவசாயிகளை ஏமாற்றி வருகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் ஏக்கருக்கு 4,000 ரூபாய் வீதம் நிவாரண உதவி வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

**இயற்கை வேளாண் கண்காட்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,02:10 IST

ஈரோடு: ஈரோடு மல்லிகை அரங்கில் இன்று காலை 9 மணிக்கு இயற்கை வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் துவங்குகிறது. ஈரோடு கலெக்டர் சவுண்டையா தலைமை வகிக்கிறார். தமிழக அரசின் திட்டக்குழு உறுப்பினர் டாக்டர் குமாரவேலு, லயன்ஸ் கவர்னர் மணி, இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் உள்பட பலர் பேசுகின்றனர். கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் மூன்று நாட்கள் நடக்கிறது. நிறைவு நாள் விழாவில் தமிழக அரசு விவசாய தொழிலாளர்கள் நலவாரியத்

தலைவர் செல்லமுத்து பேசுகிறார். ஏற்பாடுகளை ஈரோடு மிட் டவுன் லயன்ஸ் சங்கத்தினர் செய்து வருகின்றனர்.

**கேரளா மாநில விவசாய குழுவினர் பண்ருட்டி பலா குறித்து கருத்து பரிமாற்றம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,01:15 IST

பண்ருட்டி : கேரளா மாநில விவசாய குழுவினர் பலாப்பழ விற்பனை குறித்து பண்ருட்டியில் கருத்து பரிமாற்றம் செய்து கொண்டனர். கேரளா மாநிலம் கோட்டயம் கிராம ஸ்ரீ விவசாய(பார்மர்ஸ்) கிளப் சார்பில் பலாப்பழம் மூலம் சிப்ஸ், அல்வா, உலர்சுளை, வற்றல், கொட்டை சிப்ஸ், உள்ளிட்ட 25 வகையான உலர் பொருட்கள் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர். கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் பலாப்பழம் விற்பனை செய்வது குறித்து தரம் உயர்த்துதல் மற்றும் கருத்து பரிமாற்றம் செய்ய தாமஸ் தலைமையில் 25 பேர் கொண்ட குழுவினர் நேற்று பண்ருட்டிக்கு வந்தனர். அவர்களை விதை சான்று உதவி இயக்குனர் ஹரிதாஸ் வரவேற்றார். பலாப்பழ குடோன்களில் சந்தையில் விற்பனை செய்வது, பராமரிப்பது, சுவை, தரம், ரகங்கள் குறித்தும் விவரித்தனர்.

கேரளா விவசாய குழுவினர் சார்பில் தாங்கள் தயாரிக்கும் பலாசுளை சிப்ஸ் உள்ளிட்ட பொருட்களை வழங்கி அவற்றை செய்யும் முறைகள் குறித்து விவரித்தனர். பின் கேரளா கிராம ஸ்ரீ விவசாயக்குழு தலைவர் தாமஸ் நிருபர்களிடம் கூறியதாவது :- எங்கள் பகுதியில் பலாமரம் ரப்பர் மரத்தை பாதுகாக்கவே வரப்பு பகுதியில் பயிரிட்டுள்ளோம். எங்கள் பலாப்பழம் சுவை குறைவாக உள்ளதால் ஒரு பலாப்பழம் 2 ரூபாய் அளவில் அடிமட்ட விலையில் விற்கிறோம். பலாப்பழங்கள் மாட்டு தீவனத்திற்காக அதிகம் பயன்பட்டு வருகிறது. எங்கள் குழு மூலம் பலாப்பழம் மூலம் ஜெல்லி, அல்வா, பலாப்பவுடர், வற்றல், உலர் பலாப்பழம், உலர்வாழைப்பழம், பலாக்கொட்டை உள்ளிட்ட 25 வகையான உலர் பழங்கள் பதப்படுத்தி தயாரித்து வருகிறோம். ஆனால் பண்ருட்டியில் வெளிசந்தையில் பலாப்பழம் ஒன்று 100ரூபாய் முதல் 1,000ம் ரூபாய் வரை விற்கிறது.

அதனால் பலா மரம் வளர்த்தல், தரம் வழங்குவது குறித்தும், விற்பனை அதிகரிப்பது மேம்படுத்துவது குறித்து திண்டுக்கல்,பெரியகுளம், திருச்சி ஆகிய இடங்களில் ஆய்வு செய்தோம். பண்ருட்டி மார்க்கெட் மற்றும் பாலூர் பண்ணையில் தயாரிக்கும் பலா ரகம்.1, ரகம்.2, சிங்கப்பூர் பலா, பேச்சிப்பாறை ரகம்1, 2, ஆகியவை குறித்து அறிந்து கொள்ள வந்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

"வெல்ல உற்பத்தி" வெகுஜோர்

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,00:00 IST



மதுரை: அலங்காநல்லூர், பாலமேடு, ஐராவதநல்லூர், மேலூர், உசிலம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் கரும்பு சாகுபடி 10 ஆயிரம் எக்டேரில் நடக்கிறது. இதனால், வெல்ல உற்பத்தியும் இங்கு அதிகம். டீசல் இன்ஜினை பயன்படுத்தி, கரும்புகளை பிழிந்து சாறு எடுத்து, தலா 220 லிட்டர் கொள்ளளவு கொண்ட கொப்பரையில் ஊற்றுகின்றனர். பின், கொப்பரையை தீ மூட்டி கரும்புப்பாகு தயாரிக்கின்றனர். மிதமான சூட்டில், கரும்பு பாகை கட்டிகளாக உருட்டி வெல்லம் தயார் செய்யப்படுகிறது. இந்த தொழிலில் 500க்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு, கொப்பரை ஒன்றுக்கு 100 ரூபாய் கூலியாக கிடைக்கிறது. வெல்லம் விலை உயர்ந்தாலும் குறைந்த கூலியே கிடைப்பதால், வெல்ல தயாரிப்பு இவர்களுக்கு மட்டும் கசக்கிறது.

அமெரிக்க மாணவர்களின் ""பிரமிப்பு"

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,00:00 IST

கோவை: இங்குள்ள வேளாண் பல்கலை மற்றும் அமெரிக்காவில் உள்ள கார்னல் பல்கலை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதன்படி, முதற்கட்டமாக கோவை வேளாண் பல்கலை மாணவர்கள், கார்னல் பல்கலைக் கழகத்திற்குச் சென்று இரண்டு மாதம்

கல்வி கற்றனர். தொடர்ந்து, கார்னல் பல்கலைக் கழகத்தின் 62 மாணவர்கள், கோவை வேளாண் பல்கலைக் கழகத்திற்கு வந்தனர்.



கோவை வேளாண் பல்கலை ஆராய்ச்சி நிலையங்கள், வயல்வெளிகள், வகுப்பறைகளை அமெரிக்க மாணவ, மாணவியர் பார்வையிட்டனர். பின், உழவர் சந்தை செயல் படும் விதம், போக்குவரத்து வசதி, விலை ஆகிய தகவல்கள் குறித்து அறிந்து கொண்டனர்."இவ்வளவு வகையான காய்கறிகளை வாழ்க்கையில் இப்போது தான் நான் பார்க்கிறேன். அமெரிக்காவிலும் சந்தை உண்டு. அங்கு பாகற்காய், புடலங்காய் ஆகியவை இல்லை. இங்குள்ள உழவர் சந்தை பிரமிப்பை ஏற்படுத்துகிறது' என்கிறார் கார்னல் பல்கலைக் கழக மாணவி செலஸ்டி மேரி பால்கான்.

**விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கும் விழா**

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,01:30 IST

தொட்டியம்: தொட்டியம் யூனியன் திருநாராயணபுரம் கிராமத்தில், இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம், வரதராஜபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம், அக்ரி கிளினிக் ஆகியவை சார்பில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கும் விழா நடந்தது. தொட்டியம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரசேகரன் வரவேற்றார். அகில இந்திய வாழை சாகுபடியாளர் சங்கத் தலைவர் சுகுமார் தலைமை வகித்தார். திருச்சி இப்கோ நிறுவன மண்டல மேலாளர் சான்பாஷா முன்னிலை வகித்தார். திருச்சி வானொலி நிலைய பண்ணை இல்ல

ஒளிபரப்பாளர் சரவணன், திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு பொதுமேலாளர் குணசுந்தரம் ஆகியோர் விவசாயிகளுக்கு அடையாள அட்டை, மானிய விலையில் வேளாண் கருவிகளை வழங்கிப் பேசினர். தொட்டியம் வேளாண்மை அலுவலர் முரளிதரன் பங்கேற்று விவசாயிகள், அடையாள அட்டை பெறுவதற்கான வழிமுறைகள், ராஜராஜன் 1,000 திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தெளிப்பு நீர் கருவி மானியம், துல்லியப்பண்ணை மானியம், ஜிப்சம், ஜிங்சல்பேட் மின்கிட்கள், தெளிப்பான்கள் குறித்த விபரங்களை விளக்கினார். வரதராஜபுரம் கூட்டுறவு வங்கி கிளை செயலாளர் சரவணன் நன்றி கூறினார்.

**கரும்பு விலை, பயிர்க்கடன் உயர்த்தி வழங்க தேசியவாத கிஸான் காங்கிரஸ் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,01:26 IST

திருச்சி: தேசியவாத கிஸான் காங்கிரஸின் மாநில, மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் திருச்சியில் நடந்தது. மாநிலத்தலைவர் பரமசிவம் தலைமை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் லெட்சுமி நரசிம்மன் வரவேற்றார். மாநிலச் செயலாளர் சச்சிதானந்தம், துணைத்தலைவர்கள் ராம்தாஸ், சந்திரன் பொருளாளர் தாரணி நரசிம்மன், பொதுச்செயலாளர் நந்தகோபாலன் உட்பட பலர் பங்கேற்றனர். அண்டை மாநிலங்களில் கரும்பு டன்னுக்கு 2,500 ரூபாய் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் 1,900 ரூபாய், போக்குவரத்துக்கு 100 ரூபாய் என 2,000 ரூபாய் மட்டுமே வழங்கப்படுகிறது. டன்னுக்கு 2,500 ரூபாயாக உயர்த்தி வழங்கவேண்டும். நீலகிரி மாவட்டத்தில் தேயிலை மற்றும் வணிகப்பயிர்களின் உற்பத்தி விலைகளையும், அரசு அறிவிக்கும் சலுகைகளையும், சிறு விவசாயிகளுக்கும் கிடைக்கவும் மேற்கண்ட வணிகப்பயிர்களையும் விவசாய உற்பத்திப்பிரிவில் சேர்க்கவேண்டும். விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக 9,000 ரூபாய் பயிர்க்கடனாக வழங்கப்படுகிறது. அதை தமிழக அரசு 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**விவசாயிகளுக்கான ஐசோபாம் எண்ணெய் வித்து பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,00:55 IST

குளித்தலை: குளித்தலை அருகே விவசாயிகளுக்கான ஐசோபாம் எண்ணெய் வித்து பயிற்சி முகாம் நடந்தது. குளித்தலை அருகே தோகமலை யூனியன் கீழவெளியூர் சமுதாயக்கூடத்தில் கரூர் உழவர் பயிற்சி நிலையம் சார்பில் ஐசோபரம் எண்ணெய்வித்து விவசாயிகள் பயிற்சிக்கு வேளாண்மை இயக்குனர் ஜெகதீசன் தலைமை வகித்தார். தோகமலை யூனியன் தலைவர் கண்ணன், துணை தலைவர் தனம், கல்லடை பஞ்சாயத்து தலைவர் ராஜலிங்கம் ஆகியோர்கள் முன்னிலை

வகித்தனர். தோகமலை வேளாண்மைதுறை அலுவலர் கண்ணதாசன் வரவேற்றார். ஐசோபாம் எண்ணெய்வித்து இரண்டு நாள் பயிற்சியில் கரூர் வேளாண்மை துணை இயக்குனர் சவுந்திரம், கலெக்டர் நேர்முக உதவியாளர் கந்தசாமி, சிறுகமணி வேளாண்மை அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் சகுந்தலை, புழுதேரி சரஸ்வதி வேளாண்மை அறிவியில் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் திரவியம் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் விளக்கினர். விவசாயிகள், உழவர்மன்ற அமைப்பாளர்கள் பங்கேற்றனர். தோகமலை வேளாண்மை உதவி இயக்குனர் காதர் மொஹைதீன் நன்றி கூறினார்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ. 25 கோடி பயிர் கடன் வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,01:09 IST

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை மூலம் 25 கோடி ரூபாய் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது,' மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தெரிவித்தார். பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நேற்று விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடந்தது. கலெக்டர் விஜயகுமார் பேசியதாவது: பெரம்பலூர் மாவட்டத்தில் சராசரியாக 861 மில்லி மீட்டர் மழை ஆகும். நடப்பாண்டு 1,053 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இதன் பயனாக 12 ஆயிரத்து 650 ஹேக்டர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், 6,100 ஹேக்டர் நிலப்பரப்பில் ராஜராஜசோழன் நெல் சாகுபடி முறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விதை நெல் 35 மெட்ரிக் டன், உளுந்து , துவரை விதைகள் நான்கு மெட்ரிக் டன்னும், வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம். உரம், பூச்சி மருந்து ஆகியவை தனிநபர் கடைகளில் அரசு நிர்ணய விலைகளில் விற்பனை செய்ய இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் 25 கோடி ரூபாய் பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது. மத்திய காலகடனாக 2.50 கோடி ரூபாயும், சுய உதவிக்குழு கடனாக இரண்டு கோடி ரூபாயும், சொட்டுநீர் பாசன கடனாக ஏழு லட்சம் ரூபாயும், நகைக்கடனாக 30 கோடி ரூபாயும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மழையால் பயிர் சேதமடைந்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 28.36 கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார். டி.ஆர்.ஓ., பழனிசாமி, மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சிவக்குமார், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) ராஜராஜசோழன், ஆர்.டி.ஓ., ரேவதி, தேர்தல் தாசில்தார் நாராயணன், தாசில்தார்கள் கார்த்திகேயன், ரவிக்குமார், தங்கமுத்து பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 21,2011,03:21 IST

தென்காசி: செங்கோட்டையில் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது. செங்கோட்டை வட்டாரத்தில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம், ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டம், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், விதைகள் கிராம திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களில் பயன்பெறும் விவசாயிகளை கண்டறிந்து அவர்களுக்குரிய இடு பொருட்களை வழங்கி அடையாள அட்டை வழங்கும் விழா செங்கோட்டையில் நடந்தது. வேளாண்மை இணை இயக்குநர் தேவசகாயம் தலைமை வகித்து பேசும் போது, ""விவசாயிகள் வேளாண் திட்டங்களை நன்கு பயன்படுத்தி பயன் பெற வேண்டும்'' என்றார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் வைத்திலிங்கம், உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் அழகிரிசாமி விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கினர். ஏற்பாடுகளை வேளாண் உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன், வேளாண்மை அலுவலர் ஜெயசுதா, உதவி விதை அலுவலர்கள் வரதராஜன், பரமசிவம், உதவி வேளாண்மை அலுவலர்கள் மாரியப்பன், சிக்கந்தர் அமீன், செல்வகுமார், முனீஸ்வரன் செய்திருந்தனர்.

**வரத்து அதிகரிப்பு: இறங்கு முகத்தில் காய்கறி விலை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,23:41 IST

சிவகங்கை : "சிவகங்கை வாரச்சந்தையில் காய்கறி வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறையும்' என, வியாபாரிகள் தெரிவித்தனர். காய்கறி விலை நிலவரம் (கிலோ): கத்தரிக்காய்- 20; 30 க்கு விற்ற வெண்டைக்காய் - 40; பாகற்காய்- 32; முருங்கை பீன்ஸ்- 40; கேரட்- 40; முள்ளங்கி- 24; உருளை கிழங்கு- 30; முட்டை கோஸ்- 20; தக்காளி - 40; கருணை கிழங்கு- 30; இஞ்சி- 40; இரண்டாவது ரகம் - 30; அவரைக்காய்- 20; 70 க்கு விற்ற பட்டர் பீன்ஸ்- 60; 40 க்கு விற்ற வெங்காயம்- 60; 30க்கு விற்ற பெல்லாரி- 50; காலிபிளவர்- 20; சேணை கிழங்கு- 30; சேம்பு- 30; 20 க்கு விற்ற பச்சை மிளகாய்- 24; 24 க்கு விற்ற பீட்ரூட்- 30; நூக்கல் - 32; 70 க்கு விற்ற சோயாபீன்ஸ் - 60; எலுமிச்சை- 25; பீர்க்கை - 40; 40 க்கு விற்ற டர்னிப் - 30; சீனி அவரை - 15; 20 க்கு விற்ற சவ்சவ் - 15; மல்லி தழை - 30; 12 க்கு விற்ற பூசணி 20 ரூபாய்க்கு விற்றது. காய்கறி சீசன் துவங்கியதால் இனி விலை குறையும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.
பழங்கள்: 100 க்கு விற்ற ஆப்பிள்- 110; 80 க்கு விற்ற 2வது ரகம் - 90; ஆந்திரா ஆரஞ்சு- 50; கொடைக்கானல் ஆரஞ்சு - 40; திராட்சை வெள்ளை - 60; மஸ்கட் கருப்பு - 80; கருப்பு- 40; அன்னாசி பழம்- 30; 80 க்கு விற்ற மாதுளை- 100; 2வது ரகம்- 90; சீத்தாப்பழம் - 40; சப்போட்டா - 20 ரூபாய்க்கும் விற்றது.

**அமோக உற்பத்தி: இறங்காத அரிசி விலை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,23:41 IST

சிவகங்கை : உற்பத்தி அதிகரித்தபோதும், சிவகங்கையில் அரிசி விலை குறைய வில்லை. இங்கு மளிகை பொருள் விலை விபரம்: துவரம் பருப்பு- 65; 2வது ரகம் - 60; தட்ட பயறு- 56; 2வது ரகம் - 48; கடலை பருப்பு- 38; 2வது ரகம் - 36; உளுந்தம் பருப்பு- 65; 2வது ரகம் - 63; வெள்ளை கொண்ட கடலை - 62; 2 வது ரகம் 54; 36 க்கு விற்ற சிவப்பு கொண்டக்கடலை- 38; 2 வது ரகம் 32; பாசி பருப்பு- 68; 2வது ரகம் - 65 62க்கு விற்ற பாசி பயறு- 60; 2வது ரகம் - 58; மொச்சை பயறு- 48; வெள்ளை மொச்சை- 62; 24 க்கு விற்ற பட்டாணி- 22; வெள்ளை பட்டாணி- 22; மல்லி- 49; 2வது ரகம் - 45; 75 க்கு விற்ற புளி- 85; நயம்- 90; பொரிகடலை - 42; 65க்கு விற்ற வத்தல்- 70; 60க்கு விற்ற 2வது ரகம்- 65; மலை பூண்டு- 240; தரப்பூண்டு- 160; 38 க்கு விற்ற வெல்லம் - 34; 78க்கு விற்ற கருப்பட்டி (வேம்பார்)- 84; சர்க்கரை - 33; சோம்பு-140; வெந்தயம் - 520; கசகசா - 280; சீரகம்- 180; கடுகு- 380; மிளகு - 260; 180 க்கு விற்ற மஞ்சள் - 210 ரூபாய்க்கு விற்றது. அரிசி (கிலோ): 32க்கு விற்ற கல்சர் பொன்னி- 31; டீலக்ஸ் பொன்னி- 28; 21 க்கு விற்ற ஐ.ஆர்., 20 - 20; செல்லப்பொன்னி - 22; 30 க்கு விற்ற பொன்னி பச்சரிசி - 32; 21க்கு விற்ற ஐ.ஆர்., 20 பச்சரிசி- 22; 23க்கு விற்ற இட்லி அரிசி- 26; 24 க்கு விற்ற கோதுமை - 24; சோளம் - 16; கம்பு -18; கேப்பை -17; வரகரிசி -36 ரூபாய்க்கு விற்றது. அறுவடை துவங்கியும் புதிய நெல் வரத்து குறைவாக இருப்பதால் அரிசி விலை குறையவில்லை என வியாபாரிகள் தெரிவித்தனர். எண்ணெய் (லிட்டர்) : கடலை எண்ணெய் - 95; பாமாயில் - 65; நல்லெண்ணெய் - 110, 110 க்கு விற்ற தேங்காய் எண்ணெய் - 120 ரூபாய்க்கு விற்றது.

**மரக்கன்றுகள் பராமரிப்பு கண்காணிக்க சிறப்பு குழு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,23:53 IST

திண்டுக்கல் : மாவட்டத்தில் மரக்கன்றுகள் பராமரிப்பை கண்காணிக்க சிறப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் நிர்வாகம் சார்பில் கடந்த 2009ல் 2.5 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டன. இவற்றில் 60 சதவீத மரக்கன்றுகள் நன்றாக வளர்ந்துள்ளன. 2010ல் 5 லட்சம் மரக்கன்றுகள் பள்ளிகள், ஊராட்சிகள், தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் நடப்பட்டன. மரக்கன்றுகள் அழிவிலிருந்து காக்க குறைந்தது ஓர் ஆண்டு தேவை. அதற்குள் அவை சேதமாகிவிடக்கூடாது. மரக்கன்றுகளை முறையாக பராமரிக்க வேண்டும் என கலெக்டர் வள்ளலார் உத்தரவிட்டுள்ளார். கல்வி, வேளாண்மை, ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் கொண்ட பராமரிப்பு குழு

அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் தங்கள் துறை சார்ந்த பகுதிகளில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகளை ஆய்வு செய்வர்.

**பயிர் சேதத்துக்கு ரூ.24 கோடி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,23:37 IST

ராமநாதபுரம் :மாவட்டத்தில் பருவ மழையில் சேதமடைந்த பயிர்களுக்கு 24 கோடி ரூபாய் நிவாரணத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. பருவமழையால் பல்வேறு பகுதிகளில் பயிர்கள் சேதமடைந்தன. நெல் மட்டுமின்றி மிளகாய், பருப்பு பயிர்களும் இதில் அடங்கும். இதற்கு இழப்பீடாக 24 கோடி ரூபாய் அரசு வழங்கியுள்ளது. பாதிப்புக்கு உள்ளான விவசாயிகள் கணக்கெடுக்கப்பட்டு, அந்தந்த தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்படும். கணக்கு இல்லாதவர்கள் உடனே தொடங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. திருவாடனை மற்றும் ஆர்.எஸ்.மங்கலம் பகுதிக்கு 5.50 கோடி ரூபாய் விவசாயிகளின் சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. எஞ்சியவர்களுக்கு ஜன., 25க்குள் வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகள் ஆலோசனை கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,23:31 IST

தேனி : உத்தமபாளையத்தில் ஜனவரி 27 ல் தென்னை விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடக்கிறது. தென்னை விவசாயிகள் நல வாரியம் சார்பாக நடக்கும் இக்கூட்டத்தில் வாரிய தலைவர் ராஜ்குமார்மன்றாடியார் மற்றும் ஆழியாறு தென்னை ஆராய்ச்சி மைய அதிகாரிகள், பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி அதிகாரிகள் பங்கேற்கின்றனர். தென்னை விவசாயிகளின் பிரச்னை குறித்த கலந்துரையாடல் நடத்தப்பட்டு, அவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகிறது. மானிய உதவி திட்டங்கள் பற்றி விளக்கப்படுகிறது.

**தர்பூசணி சாகுபடி செய்ய ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,22:11 IST

பொங்கலூர்: பொங்கலூர் அருகே பெரியாரியபட்டியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தர்பூசணி அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. பொங்கலூர் வட்டாரத்தில் பெரியாரியபட்டி, தொங்குட்டிபாளையம், பெருந்தொழுவு உள்ளிட்ட இடங்களில் 50 ஏக்கர் பரப்பளவில் தர்பூசணி

சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது, நல்ல வடிகால் வசதியுள்ள மணல் கலந்த செம்மண் நிலங்களில் நன்கு வளரும் இயல்புடையது. இப்பகுதியில், தர்பூசணி விளைவதற்கு தேவையான மண் வளமும், சீதோஷ்ண நிலையும் இருப்பதால், விவசாயிகள் தர்பூசணி சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். கார்த்திகை பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட செடிகள் காய்ப்புக்கு வந்துள்ளன. இவை, இம்மாத இறுதியில் அறுவடை செய்யப்படும் நிலையில் உள்ளது. மாசி, பங்குனி மாதங்களில் கோடை வெப்பம் அதிகரிக்கும் என்பதால், தர்பூசணி விற்பனை சூடுபிடிக் கும். இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள விவசாயிகள் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளனர். தற்போது தை பட் டத்திலும் தர்பூசணி சாகுபடி செய்ய ஆரம்பித்துள்ளனர். விவசாயிகள் கூறுகையில், "கடந்தாண்டு வியாபாரிகள் ஒரு டன் 6,000 ரூபாய் வரை கொள்முதல் செய்தனர். நோய் தாக்காமல் செடிகள் நன்றாக வளர்ந்தால், ஏக்கருக்கு 10 டன் வரை மகசூல் கிடைக்கும். இதற்கு குறைந்தளவு தண்ணீர் இருந்தால் போதும். 10 அடி இடைவெளியில் பார்களில் நடவு செய்வதால், வேலையும் குறைவு. இதற்கு பிஞ்சு பிடிக்கும் பருவத் தில் இருந்து வாரம் ஒருமுறை மருந்து தெளிக்க வேண் டும். இல்லாவிட்டால், காய்கள் சொத்தையாக மாறி விடும். இதற்கு மார்க்கெட்டில் நல்ல விலை கிடைக் காது. மற்ற காய்கறி மற்றும் பழ வகைகள் விலை உயர்ந்து காணப்படுவதால், கடந்தாண்டை விட இந் தாண்டு தர்பூசணிக்கு கூடுதல் விலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது,' என்றனர்.

**வரத்து குறைவால் வாழைத்தார் விலை கடும் உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,22:10 IST

பொள்ளாச்சி: பொள்ளாச்சி சந்தைக்கு வாழைத்தார் வரத்து குறைந்துள்ளதால், அனைத்து ரக வாழையின் விலையும் 40 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. பொள்ளாச்சி சந்தைக்கு தூத்துக்குடி, குளித்தலை மற்றும் பொள்ளாச்சி சுற்றுபகுதிகளான ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வாழைத்தார் வரத்துள்ளது. இங்கு வரும் வாழைத்தாரில், 70 சதவீதம் கேரளப்பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. பொள்ளாச்சி மற்றும் தூத்துக்குடி பகுதிகளில் பனி பொழிவு அதிகரித்ததால், வாழை விளைச்சல் குறைந்துள்ளது. வழக்கமாக இரண்டாயிரம் தார் வரத்தாக இருக்கும் நேரத்தில் தற்போது ஆயிரம் வாழைத்தார் மட்டுமே வரத்தாக உள்ளது. இதில், வாரத்திற்கு இரு முறை 600 வாழைத்தார் வீதம் கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது. போதிய வரத்து இல்லாததால், அனைத்து ரக வாழைத்தார்களின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. வாழைத்தார் விலை நிலவரம் (வாழைத்தார் ஒன்றுக்கு): பூவன் - 250, மோரிஸ் - 320, கற்பூரவல்லி - 250, நேந்திரம் (கிலோ) - 22, "கதளி' - 200, செவ்வாழை - 500, ரஸ்தாளி - 200 என ஏலம் போனது. பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் வாழைத்தார் வியாபாரிகள் கூறுகையில், "பனி பொழிவு காரணமாக விளைச்சல் குறைந்துள்ளது. பொங்கல் பண்டிகைக்கு வாழைத்தார் தேவை

அதிகளவில் இருந்ததால், பல்வேறு பகுதிகளிலிருந்தும் வாழை வரத்து அதிகளவில் இருந்தது. இதனால், தற்போது வரத்து குறைந்துள்ளது. போதிய வரத்து இல்லாததால், அனைத்து ரக வாழைத்தாரின் விலையும் 30 முதல் 40 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. மீண்டும் சந்தைக்கு வரத்து அதிகரிக்க இரண்டு மாதங்களாகும். வரத்து அதிகரித்தால் மட்டுமே விலை சரிய வாய்ப்புள்ளது, என்றனர்.

**முன்கூட்டியே மஞ்சள் அறுவடை:விவசாயிகள் திட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,22:10 IST

பொங்கலூர்: பொங்கலூர், தொங்குட்டிபாளை யத்தில் மஞ்சள் அறுவடை செய்யும் பணி விறுவிறுப்பாக நடந்து வருகிறது. மஞ்சளுக்கு நல்ல விலை கிடைப்ப தாலும், புதிய மஞ்சள் வரத்து அதிகரித் தால், விலை குறையும் என்பதாலும், முன்கூட்டியே அறுவடை செய்ய விவசாயிகள் ஆயத்தமாகி வருகின்றனர். ஓராண்டு பயிரான மஞ்சள், நல்ல வடிகால் வசதியுள்ள வண்டல் மண், செம்மண் நிலங்களில் நன்கு வளரும் இயல்புடையது. இதற்கு நல்ல நீர்வளம் இருப்பதும் அவசியம். பி.ஏ.பி., வாய்க் காலில் கடந்தாண்டு முதல் போதிய தண்ணீர் இருப்பதாலும், ஏமாற்றாமல் பெய்த மழை காரணமாகவும் கிணறு களில் நீர் வளம் நிரம்பியுள்ளது. இதை பயன்படுத்தி பொங்கலூர் பகுதி விவ சாயிகள் வைகாசி பட்டத்தில் ஆயிரம் ஏக்கரில் மஞ்சள் சாகுபடி செய்திருந் தனர். ஐப்பசி மாதம் பெய்த மழையால் சில இடங்களில் மட்டும் பயிர்கள் அழுகியுள்ளன. மற்ற காய்கறி பயிர்களைப் போல் அல்லாமல், மஞ்சளை கண்ணும் கருத்து மாக விவசாயிகள் வளர்த்து வருகின் றனர். மஞ்சள், வேப்பம் புண்ணாக்கு, பஞ்சு கழிவு, மாட்டு சாணம் போன்ற இயற்கை உரங்களை அதிகளவில் பயன்படுத்தி பயிர் செய்யப்படுகிறது. விவசாயிகளின் மிக முக்கிய பணப் பயிராக மஞ்சள் திகழ்கிறது. மஞ்சள் சாகு படி கடினமான பணி என்றாலும், ஏமாற் றம் அளிக்காமல் லாபம் தருவதால், மஞ்சள் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர். மார்க்கெட்டில் மஞ்சளுக்கு தேவை கூடிக்கொண்டே வருகிறது. இதனால், இதன் விலை உயர்வு தவிர்க்க முடியாத தாகி விட்டது. உணவுக்கு மட்டுமின்றி, பெயிண்ட், சாயம் போன்ற பொருட்கள் செய்வதற்கும் மூலப்பொருளாகவும், சிறந்த கிருமி நாசிணியாகவும் மஞ்சள் பயன்படுகிறது. சென்றாண்டு முதல் மஞ்சளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. தற்போது ஒரு குவிண்டால் பதப்படுத்தப்பட்ட மஞ்சள் 16 ஆயிரம் ரூபாய் வரை விலை போகிறது. வழக்கமாக மாசி, பங்குனி மாதங்களில் மஞ்சள் அறுவடைக்கு வரும். பங்குனி மாதத்தில் புதிய மஞ்சள் வரத்து பெருமளவு அதிகரிக்கும். புது மஞ்சள் வரத்து அதிகரித்தால், விலை இறங்க வாய்ப்புள்ளதால், முன் கூட்டியே அறுவடை செய்ய விவசாயி கள் ஆயத்தமாகி வருகின்றனர். தற் போது, மஞ்சள் தோகைகளை அறுக்கும் பணியை சில விவசாயிகள் விறுவிறுப் பாக செய்து வருகின்றனர். அடுத்த வாரத்தில்

மஞ்சள் கிழங்குகளை வெட்டி எடுக்கும் பணியை துவக்க திட்டமிட்டுள் ளனர். விலை குறைவால் பாதிப்படை வதை தவிர்க்க, இவ்வாறு முடிவு செய்துள்ளனர்.

**கரும்பு ஆராய்ச்சி நிறுவன தொழிலாளர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,21:59 IST

கோவை: மத்திய கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் முன், சி.ஐ.டி.யு., பண்ணை தொழிலாளர் சங்க வாயிற் கூட்டம் நடந்தது. இதில், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் அதிகாரிகள் பெற்று வரும் நிலையில், தினக்கூலி தொழிலாளர்கள் குறித்து கண்டு கொள்ளவில்லை. இரு வேறுவிதமாக பாரபட்சமான சம்பளம் வழங்கப்படுகிறது. 2000-01ம் ஆண்டு சட்டப்படி தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய போனஸ் வழங்க வேண்டும் என மத்திய அரசு நிர்வாக தீர்ப்பாயம் உத்தரவிட்டும், உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டும் தினக்கூலி வழங்கப்படவில்லை. நிர்வாகம், மத்திய அரசின் குறைந்த பட்ச கூலி சட்டம், போனஸ் சட்டம், நிரந்தரமாக்கல் சட்டம் ஆகியவற்றை அமல்படுத்த மறுத்து வருவதுடன், தொழிலாளர் விரோதப் போக்கை கடை பிடித்து வருகிறது. இதனை கண்டித்து தொடர் போராட்டங்கள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. கோவை எம்.பி., நடராஜன், சி.ஐ.டி.யு., மாநில குழு உறுப்பினர் பெருமாள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,21:58 IST

சூலூர்: பீடம்பள்ளியில் வேளாண்துறை சார்பில், விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் மற்றும் இடுபொருட்கள் வழங்கும் விழா நடந்தது. வேளாண்துறை சார்பில் நடப்பாண்டு ஒருங்கிணைந்த மக்காச்சோளம் அபிவிருத்தி, தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டம், பயிர் பாதுகாப்பு திட்டம் உள்ளிட்ட நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. விவசாயிகளுக்கு மானிய விலையில் பயிறு விதைகள், தானிய விதைகள், உயிர் உரங்கள், பூச்சி மருந்துகள், விசைத் தெளிப்பான் மற்றும் கைத்தெளிப்பான்கள், தார்ப்பாய்கள், விதை சேமிப்பு கலன்கள் வழங்கப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக, சூலூர் ஒன்றியத்துக்குட்பட்ட பீடம்பள்ளி துண்டுக்காரன் தோட்டத்தில் விவசாயிகளுக்கு இடுபொருட்களும் மற்றும் ஐசோபாம்- மக்காசோளம் குறித்த பயிற்சியும் அளிக்கப்பட்டது. பயிற்சி முகாமுக்கு, சூலூர் ஒன்றியக்குழு தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். பீடம்பள்ளி ஊராட்சி தலைவர் கோவிந்தசாமி, பட்டணம் ஊராட்சி தலைவர் கோமதி

செல்வக்குமார் முன்னிலை வகித்தனர். உதவி வேளாண் அலுவலர் நசீர் வரவேற்றார். மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் நடராஜன் திட்டங்கள் குறித்து விளக்கி பேசினார். கோவை வேளாண் பல்கலை பேராசிரியர் நல்லதம்பி, பூச்சியியல் துறை பேராசிரியர் துரைராஜ் ஆகியோர் தொழில்நுட்ப விளக்கம் அளித்து பேசினர். விழாவில், சூலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மோகன்ராஜ் சாமுவேல், தோட்டக்கலை உதவி இயக்குனர் சுமதி மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர். துணை அலுவலர் திருமூர்த்தி நன்றி தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு வயல்வெளி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,22:21 IST

காங்கயம்: வேளாண் துறை சார்பில் நத்தக்காடையூர், குட்டப்பாளையம் பகுதி விவசாயிகளுக்கு நெல் வயல்வெளி பயிற்சி நடந்தது. நத்தக்காடையூர் சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இப்பகுதியில் உள்ள விவசாயிகள், நஞ்சை சம்பா நெல் சாகுபடி செய்துள்ளனர். குறைந்த செலவில் அதிக மகசூல் தரும் ராஜராஜன்-1000 என்ற ஒற்றை நாற்று முறையிலும் மற்றும் சாதாரண முறையிலும் நெல்சாகுபடி செய்துள்ளனர். இந்த நெற்பயிர்களில், விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய பயிர் பாதுகாப்பு முறை குறித்து, காங்கயம் வேளாண் துறை சார்பில், குட்டப்பாளையம் பகுதியில் உள்ள பாப்பாங்காடு தோட்டத்தில் விவசாயிகளுக்கு நெல் வயல்வெளி பயிற்சி முகாம் நடந்தது. காங்கயம் வேளாண் உதவி இயக்குனர் மாணிக்கம் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் சுசீலா, பழையகோட்டை உழவர் ஆர்வலர் குழு தலைவர் செல்லமுத்து, நத்தகாடையூர் உதவி வேளாண் அலுவலர் நடராஜ், "டான்வா' பண்ணை மகளிர் குழு மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

**மக்காச்சோளம் கொள்முதல் விலை சரிவு:சோகத்துடன் விவசாயிகள் அறுவடை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,22:16 IST

பல்லடம்: பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் மக்காச்சோளம் அறுவடை தீவிரம் அடைந்துள்ளது; கொள்முதல் விலை மூட்டைக்கு ரூ.100 சரிவு, விவசாயிகளிடம் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. பல்லடம், சுல்தான்பேட்டை பகுதியில் 4,000க்கும் மேற்பட்ட கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. கறிக்கோழிகளுக்கான தீவனம் தயாரிப்பில் மக்காச்சோளம் பங்கு 50 சதவீதம். தீவனம் தயாரிக்க, மக்காச்சோளம் அதிகம் தேவைப்படுவதால், பல்லடம் மற்றும் சுல்தான்பேட்டை வட்டார விவசாயிகள், ஒவ்வொரு பருவமும் குறைந்தபட்சம் 7,000

ஏக்கர் பரப்பளவுக்கு மக்காச்சோளம் சாகுபடியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். உள்ளூர் மக்காச்சோளம் முழுமையாக கொள்முதல் செய்ததுபோக, மேலும் தங்களுக்கு மக்காச்சோளம் தேவை என்பதால், பல்லடம் பகுதியில் உள்ள கறிக்கோழி உற்பத்தியாளர்கள், பண்ணையாளர்கள் தங்களின் தேவைக்கு, ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து தினமும் லாரிகள் மூலம் 50 லோடுகள் வரை மக்காச்சோளம் கொள்முதல் செய்து வருகின்றனர். இரு மாதத்துக்கு முன், 100 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை மக்காச்சோளம் கொள்முதல் விலை ரூ.1,100 ஆக இருந்தது. தற்போது மூட்டைக்கு ரூ.100 சரிந்துள்ளது. இவ்விலை கட்டுப்படியானதாக இல்லை. குறைந்தபட்சம் மூட்டைக்கு ரூ.1,200 கிடைக்க வேண்டும் என, பல்லடம் பகுதி விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

**உறைபனியால் தேயிலை செடிகளுக்கு பாதிப்பு: மகசூலை காப்பாற்ற பாதுகாப்பு பணிகள் தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 20,2011,23:10 IST

குன்னூர்: குன்னூரில் உறைபனி தாக்கம் அதிகரித்துள்ளதால், 500 ஹெக்டர் பரப்பிலான தேயிலைச் செடிகள் கருகியுள்ளன. மகசூலை காப்பதற்காக, தற்காப்பு நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். குன்னூரில், கடந்த 10 நாளாக இரவு நேரங்களில் உறைபனி தட்பவெப்பம் நிலவுகிறது. குன்னூர் அருகே கோரகுந்தாவில், மிக குறைந்தபட்சமாக மைனஸ் 4 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது. கொலக்கம்பையில் 2, குன்னூரில் 8, கோத்தகிரியில் 6 டிகிரியாக இரவு நேர வெப்பம் நிலவுகிறது. புல் தரைகளில், வெள்ளை கம்பளம் போர்த்தியது போல் பனி உறைந்து கிடக்கிறது. குன்னூர் "உபாசி' தேயிலை ஆராய்ச்சி மைய உதவி இயக்குனர் ராதாகிருஷ்ணன் கூறுகையில், ""குன்னூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உறைபனியின் தாக்கம் அதிகளவில் உள்ளது; 500 ஹெக்டர் பரப்பளவில் தேயிலைச் செடிகள் கருகி விட்டன. உறைபனியின் தாக்குதலில் இருந்து தேயிலை செடிகளை காப்பாற்ற, பனியின் தாக்கம் துவங்குவதற்கு முன்பே, தென்னை, பனங்கீற்று, தாகை இலை, புற்களை தேயிலை செடிகள் மீது போட வேண்டும்; பல விவசாயிகள் இதை கடைபிடிக்காததால், தற்போது தேயிலைச் செடிகள் கருகியுள்ளன,'' என்றார். இருப்பினும், குன்னூர் கரன்சி, கொலக்கம்பை உட்பட இடங்களில் உள்ள விவசாயிகள், தேயிலைச் செடிகளை பனியில் இருந்து காக்க, செடிகளின் மேல் புற்களை போட்டுள்ளனர். கூடலூரில் தண்ணீர், தண்ணீர்: கூடலூர் பகுதியில் இரவில் கடுமையான பனிப் பொழிவும், பகலில் வெப்பத்தின் தாக்கமும் அதிகமாக உள்ளதால், தேயிலை உற்பத்தி குறைந்து வருகிறது. இதை தவிர்க்க, தேயிலைக்கு "ஸ்பிரிங்க்லர்' மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. இதனால், மண்ணின் ஈரப்பதம் காக்கப்படுவதுடன்,தேயிலை மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகளால், சிறு தேயிலை விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டம் ஓரளவு குறைய வாய்ப்புள்ளது.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**காய்கறி விலை உயர்ந்துள்ள நிலையில் உணவு பொருள் பணவீக்கம் 15.52 சதவீதமாக குறைந்தது**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
உணவு பொருள்களுக்கான பணவீக்கம், ஜனவரி 8–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 15.52 சதவீதமாக குறைந்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 16.91 சதவீதமாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது உணவு பணவீக்கம் 1.39 சதவீதம் குறைந்துள்ளது.

வெங்காயம்

இருப்பினும் உணவு பணவீக்கம் 15 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சென்ற ஓர் ஆண்டு காலத்தில், காய்கறிகள் விலை 65.39 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில், வெங்காயம் விலை இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. பழங்கள், பால் விலை முறையே 15.91 சதவீதம் மற்றும் 13.27 சதவீதம் உயர்ந்துள்ளது. காய்கறிகள் விலை இறக்கை கட்டி பறந்துள்ள நிலையில், முட்டை, மீன், இறைச்சி ஆகிய அசைவ உணவு பொருள்கள் விலை 12.94 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனால், பொதுமக்கள் ஈட்டும் வருவாயில் பெரும்பகுதி அத்தியாவசிய உணவு பொருள்களுக்காக செலவாகி விடுகிறது.

இந்த உணவு பொருள்கள் விலை உயர்ந்துள்ள நிலையில், கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில், பருப்பு வகைகள் விலை 14.92 சதவீதம் குறைந்துள்ளது. கோதுமை, உருளைக்கிழங்கு விலை முறையே 6.11 சதவீதம் மற்றும் 2.91 சதவீதம் குறைந்துள்ளது.

பொது பணவீக்கம்
இந்நிலையில், ஒட்டுமொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்க விகிதம், சென்ற டிசம்பர் மாதத்தில் 8.43 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, நவம்பர் மாதத்தில் 7.48 சதவீதமாக இருந்தது.
உணவு பொருள்கள் விலையை கட்டுப்படுத்த, வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதுடன், உற்பத்தியாகும் உணவு தானியங்கள் வீணாகாமல் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அவற்றை சேமிக்கும் வசதியை மேம்படுத்த வேண்டும் என்று பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

## நடப்பு பருவத்தில் பருத்தி கையிருப்பு குறையும்



ஷிரமணா கங்குலி மேத்தா
அகமதாபாத்
நடப்பு 2010–11–ஆம் பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்), நாட்டின் குறைந்தபட்ச பருத்தி கையிருப்பு 35 லட்சம் பொதிகளாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தியை கொண்டதாகும்.
நடப்பு பருவத்தில், பருத்தி உற்பத்தி 3.29 கோடி பொதிகளாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனுடன், ஆரம்ப கையிருப்பு, இறக்குமதி ஆகியவற்றைச் சேர்த்து மொத்த பருத்தி அளிப்பு 3.75 கோடி பொதிகளாக இருக்கும். இவற்றுள், ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு பயன்பாட்டிற்கு பிறகு 44.50 லட்சம் பொதிகள் கையிருப்பு இருக்கும் என மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.
உள்நாட்டு ஜவுளி நிறுவனங்களுக்கு அதிக அளவில் பருத்தி தேவைப்படுகிறது. சென்ற பருவத்தில், மாதம் ஒன்றுக்கு சராசரியாக 20–23 லட்சம் பொதிகள் தேவைப்பட்டது. இது, நடப்பு பருவத்தில் 25 லட்சம் பொதிகளாக உயரும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.
இதுபோன்ற காரணங்களால், குறைந்தபட்ச பருத்தி கையிருப்பு 35 லட்சம் பொதிகளாக குறையும் என மத்திய ஜவுளித் துறையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இது, விதிமுறைப்படி இருக்க வேண்டிய குறைந்தபட்ச அளவைக் காட்டிலும் 20 லட்சம் பொதிகள் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது.